வருகிறது. ஏற்கனவே பழைய திட்டத்தின்கீழ் ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுக்கப்பட்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில் வீடு கட்டப்படுகிறது. அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த வீட்டை அப்படியே திருத்தி அமைக்க வேண்டுமானால் ரூ. 4,000-ம் சேர்ந்து ரூ. 5,600 ஆகிவிடும். அநேகமாகச் சட்டச் சிக்கல் வரும். அது முடியாது.

ஜெயபுரத்தில் அரிசனக் குடியிருப்பு.

* 245 வினா—**திரு. டி. சி. திம்மராய கவுண்டர்:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜெயபுரம் கிராமத்தில் அரிசன காலனி அமைக்க அரசு ஆர்ஜிதம் செய்துள்ள நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில்; அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அம்பேத்கார் கலைக்கல்லூரி, சென்னை

* 226 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76-ம் கல்வி ஆண்டில் சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம், வரலாறு, பி.எஸ்ஸி. கணிதம், இயல்பியல் போன்ற பாடங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அடுத்த கல்வி ஆண்டிலாவது பி.ஏ, பி.எஸ்.ஸி, பி.காம் வகுப்புகளைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1975-76-வது ஆண்டு பட்டப் படிப்பு துவங்குவதற்காக நம்முடைய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 3,22,000 ஒதுக்கப்பட்டது. அந்த

1975 நவம்பர் 7]

வகையிலே 6 பட்டப் படிப்புகளுக்கு இடம் தரவேண்டுமென்று ஏற்கனவே வழக்கமாக இருக்கிற பட்டப் படிப்புக்கு இடம் தராமல், வேலை வாய்ப்புக்கு வழி அளிக்கிற வகையில் கல்லூரி களுடைய இட வசதி, தேவைகள், மற்றவைகளை ஆராய்ந்து 6 கல்லூரிகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது. அந்த வகையில் டூரிஸம், கார்ப்பரேட் செக்கரட்டரி ஷிப், நூட்ரிஷன், டையட்டிக்ஸ், புக் இண்டஸ்ட்ரி, பப்ளிக் ரிலேஷன்ஸ் அண்ட் டூரிஸம் என்பவை 6 கல்லூரிகளில் மட்டும் இந்த ஆண்டு வைக்கப்பட்டது. மற்ற கல்லூரிகளுடைய இட வசதி, அவற்றினுடைய தேவைகள், மற்ற வற்றை கவனித்துத்தான் அவ்வப்போது துவங்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது சமீபத்திலே 10—2—3 என்று இந்தப் படிப்பை முடிக்கப் போவதாக, ஆராய்ச்சி செய்ததாகத் தகவல் வந்தது. அது நிச்சயமாகக் கொண்டு வரப் படும் என்று சொன்னால் கல்லூரிகளிலேயே அப்படிப்பட்ட படிப்புக்கான இடங்களை மட்டும் ஒதுக்குவதற்கு அரசு ஏதாவது செய்யுமா ? அம்மாதிரி பட்டப் படிப்பு இல்லாத இப்பொழுது குறிப்பிடப்பட்ட கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கு முன்னிடம் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குழுவினர் கூறிய யோசனைகளிலே அதுவும் ஒன்றாக இருக்கிறது. கல்லூரிகளிலே இருக்கிற புகுமுக வகுப்பை எடுத்து, அதைத் தனியாக போர்டின் கீழே, ஹையர் செகண்டரி ஸ்கூலில் இரண்டை வைத்துவிட்டு, கல்லூரிகளிலே முழுவதும் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு ஆக்கவேண்டு மென்ற எண்ணத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இடைக்காலத் திலே, 4, 5 ஆண்டுக்காலம் எந்தெந்தக் கல்லூரிகள் விரும்பு கின்றனவோ, அந்தந்தக் கல்லூரிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் இருக்கத்தக்க அளவுக்கும் சில உயர்நிலைப்பள்ளிகளிலே ஹையர் செகண்டரி வகுப்புகள் இருக்கத்தக்க அளவுக்கும் நாளடைவிலே எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஹையர் செகண்டரி வகுப்பைக்கொண்டு வரலாம் என்றும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு ஆகியவற்றை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் பரிந்துரை செய்திருக் கிறார்கள். இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.